அலகு
6

# முன் பள்ளி அமைப்பு



## கற்றலின் நோக்கங்கள்

- முன் பள்ளி கல்வியின் அவசியத்தை அறிந்து கொள்ளுதல்.
- முன் பள்ளி குழந்தைகளின் பல்வேறு தேவைகளைப் புரிந்து கொள்ளுதல்.
- முன் பள்ளி குழந்தைகளிடையே நல்ல பழக்க வழக்கங்களை உருவாக்குவதன் முக்கியத்துவத்தை மாணவர்கள் புரிந்து கொள்ள உதவுதல்.
- பலதரப்பட்ட முன் பள்ளிகள் பற்றிய அறிவினை மாணவர்களிடையே மேம்படுத்துதல்.
- பகல் நேர பாதுகாப்பு மையம் மற்றும் குழந்தைகள் காப்பகம் ஆரம்பிப்பதற்கு தேவையான நடைமுறைகளை மாணவர்கள் புரிந்து கொள்ள உதவுதல்.

## 6.1 முன்னுரை

முன் பள்ளி கல்வி குறித்த நவீன கால சிந்தனையானது "எவ்வாறு கற்றுக் கொள்வது" என்பதில் கவனம் செலுத்துகிறது. இந்த செயல்முறை முன் பள்ளி குழந்தைகளிடையே சிந்தனை திறனை ஆராயவும் கண்டறியவும், பயிற்சி செய்யவும் தொடங்குகிறது. இது மட்டுமின்றி கிடைக்கப்பெறும் தகவல்களைப் கொண்டு, தன்னைச் சுற்றியுள்ள உலகினை புரிந்து கொள்வதற்கும் உதவி புரிகிறது. இப்பண்புகளை கற்பிக்க முடியாது ஆனால் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஒரு குழந்தையின் வாழ்க்கைப் பருவத்தில், வளர்ச்சியின் வேகம் அதிவிரைவாக இருப்பது முன் பள்ளிப் பருவத்தில் எனவே இப்பருவம் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. முன் பள்ளி குழந்தையின் அறிவாற்றல் மற்றும் உடல் வளர்ச்சி போன்றவை, அவர்களின் சமூக மற்றும் தனிப்பட்ட பழக்க வழக்கங்களுக்கும் மதிப்புகளுக்கும் (values) அடித்தளமாக விளங்குகிறது. அவர்களின் மூளை வளர்ச்சியில் 90 சதவிகிதம், இக் காலகட்டத்தில் நிகழ்கிறது. இது சுற்றுப்புறச் சூழலின் அனுபவத்தால் பாதிக்கப்படுகிறது. எனவே இக் காலகட்டத்தில் மாறுபட்ட அனுபவங்களை அளித்தல் வேண்டும். இத்தகைய அனுபவங்களும், திறன்களையும் குழந்தைகள் பெறும் சிறந்த இடமாக முன் பள்ளி அமைகிறது. முன் பள்ளி கல்வி என்பது குழந்தையின் கல்விக்கான அடித்தளமாகும் இது குழந்தையின் வளர்ச்சியில் ஒரு முக்கியமான காலம் என்று விவரிக்கப்படுகிறது. சிறு குழந்தைகள் மற்றும் முன் பள்ளி பருவத்தினரின் உணர்ச்சி, சமூக மற்றும் உடல் வளர்ச்சியானது, அவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சி மற்றும் பின்னாளில் பெரியவர்களாவதில் நேரடி பாதிப்பினை ஏற்படுத்துகிறது. எனவே தான், குழந்தைகளின் எதிர்கால நல் வாழ்வை விரிவுபடுத்த முன் பள்ளி கல்வி மிகவும் முக்கியமானதாகும்.

## 6.2 முன் பள்ளி அமைப்பின் தேவைகள்

திறன்களைப் பெறுவதற்கு மிகவும் இணக்கமான வயதாக இருப்பது முன் பள்ளிப் பருவம் (2½ – 5 வருடங்கள்) குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு இத்தகைய முன் பள்ளிப் பருவத்தினை சரியாகப் பயன்படுத்தாவிடில், அவர்களிடத்தில் ஏற்படும் பாதிப்புகளை சரிசெய்ய இயலாது. இந்த வயதில் தூய்மை மற்றும் ஆரோக்கியப் பழக்க வழக்கங்களை, மிகவும் திறன்பட கற்றுக் கொடுக்க வேண்டும்.

- ஆர்வமூட்டும், பொழுதுபோக்கு மற்றும் குறிக்கோள் சார்ந்த விளையாட்டு செயல்பாடுகளின் மூலமாக நல்ல பழக்க வழக்கங்களையும்,நன்நெறிபண்புகளையும் மதிப்பினையும் முன் பள்ளிக் கல்வியின் மூலம் வளர்க்க முடியும். இதன் மூலமாக குழந்தைகளை நற்பாதையில் வழி நடத்த இயலும்
- குழந்தைகளுக்கு ஆரோக்கியமான மற்றும் முற்போக்கான சூழலை வழங்க முடியும்.
- குழந்தையின் பாதுகாப்பு மற்றும் சுயமரியாதை உணர்வை வலிமைப்படுத்த முடியும்.
- வாழ்நாள் முழுவதும் கற்றலைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதற்கு, சிறந்த அடித்தளத்தை அமைத்துத் தர இயலும்.
- கல்வி மற்றும் பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள குடும்பத்தைச் சார்ந்த குழந்தைகளின் வளர்ச்சியை எளிதாக்கலாம்.

**உங்களுக்குத் தெரியுமா?**

நற்கல்வி பெறுவதற்கு எனக்கு உரிமை உண்டு. குழந்தைகள் அனைவரும் பள்ளி செல்வதை ஒவ்வொருவரும் ஊக்கப்படுத்த வேண்டும் சட்டவிதி (28, 29, 23).



XII Std - Home Science TM_Unit 6.indd 181 07-12-2021 12.59.11 PM



## 6.3 முன் பள்ளி கல்வியின் குறிக்கோள்கள்

முன் பள்ளிக் கல்வியின் பரந்த குறிக்கோளானது, குழந்தையின் ஒட்டுமொத்த, வளர்ச்சியாகிய உடல், சமூக, உணர்வு மற்றும் அறிவுசார் வளர்ச்சியை நோக்கமாக கொண்டுள்ளது.

**இதன் குறிக்கோள்களாவன:**

- பூச்செடிகள், மரங்கள், பறவைகள், பச்சைப் புல்வெளிகள் போன்றவற்றை கவனித்து இயற்கையின் அழகினை ரசித்து, பாராட்ட ஊக்குவிப்பதன் மூலம் குழந்தைகளின் அழகுணர்ச்சியை கூர்மைபடுத்துதல்.
- குழந்தைகளிடையே ஆரோக்கியமான பழக்கங்களை உருவாக்கவும், தானாக ஆடை அணிதல், உணவு உண்ணுதல், தூய்மையை கடைப்பிடித்தல் போன்ற அவசியமான திறன்களைப் பெற உதவுதல்.
- குழந்தைகளின் கருத்துகள் உணர்வுகள் மற்றும் மன எழுச்சிகளை வெளிப்படுத்தவும், புரிந்து கொள்ளவும், ஏற்றுக் கொள்ளவும் மற்றும் கட்டுப்படுத்தவும் உதவுதல்.
- சிறந்த உடலமைப்பு போதுமான தசை ஒருங்கிணைப்பு மற்றும் அடிப்படை இயக்கத் திறன்களை குழந்தைகளிடையே மேம்படுத்துதல்.
- குழந்தைகளை கூர்ந்து கவனித்து, அவர்களின் ஆர்வம், தேவைகள் மற்றும் திறன்களை கண்டறிதல்.





XII Std - Home Science TM_Unit 6.indd 182 07-12-2021 12.59.12 PM

- குழந்தைகளின் வளர்ச்சி வேகத்தை உன்னிப்பாக கவனித்தல்.
- குழந்தைகளைச் சுற்றியுள்ள சூழ்நிலை, உபகரணம், கற்றல் அனுபவங்களைத் திட்டமிடல், நிகழ்வுகள் மற்றும் குழந்தைகளை குழுக்களாக அமைத்தல் போன்ற செயல்களில் கவனம் செலுத்துவன் மூலமாக, கற்றலுக்கு உகந்த சூழ்நிலையைத் திட்டமிடுதல்.
- குழந்தைகளிடத்தில் அமைதியாகவும், நேர்மறையாகவும், மரியாதையுடனும் மற்றும் நட்புடனும் தொடர்பு கொள்ளுதல் (interact).
- ஒருங்கிணைத்தல் மற்றும் கவனசெறிவை உருவாக்கும் ஏராளமான செயல்பாடுகளை ஏற்படுத்தித் தருதல்.
- தன்னைச் சுற்றியுள்ள சுற்றுப்புறச் சூழலை, பரிசோதிக்கவும் விசாரிக்கவும் குழந்தைகளை ஊக்கப்படுத்துதல்.
- தன்னுடைய எண்ணங்கள் மற்றும் உணர்வுகளை சரளமாகவும், சரியாகவும், தெளிவான பேச்சில் தன்னிச்சையாக வெளிப்படுத்தும் திறனை குழந்தைகளிடையே உருவாக்குதல்.

**உங்களுக்குத் தெரியுமா?**

முன் பள்ளிப் பருவத்தினரிடையே காணப்படும், நகம் கடித்தல் போன்ற நடத்தைப் பிரச்சினை, முன் பள்ளியில் கட்டுப்படுத்திட முடியும்

## 6.4 முன் பள்ளியின் வகைகள்:

முன் பள்ளிகள் பெரிதும் வேறுபடுகின்றன. ஒரு சில முன் பள்ளிகள், சமூக மற்றும் சுயவளர்ச்சி, மற்றவர்களுடன் பழகுதல் மற்றும் தன்னுடைய சுற்றுபபுறச் சூழலின் மீது ஆதிக்கம் செலுத்தும் உணர்வினை பெறுதல் போன்றவைகளை வலியுறுத்துகிறது. வேறு சில முன் பள்ளிகளோ, புலனுணர்வின் முக்கியத்துவம் மற்றும் உடல் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துவதில் அக்கறை செலுத்துகிறது. இன்னும் சில முன் பள்ளிகள், ஒருவழியிலோ அல்லது பலவழிகளிலோ அறிவு சார் வளர்ச்சி பெறுவதற்கு முக்கியத்துவம் தருகின்றன. ஆனால், அனேகமாக, அனைத்து முன் பள்ளிகளும், மேற்கூறிய அனைத்துமே, தங்களது முன் பள்ளியின் இலக்கு என உரிமை கோருகின்றன.

முன் பள்ளியின் வகைகளாவன,

(i) பகல் நேரக் குழந்தைகள் காப்பகம்

(ii) மாண்டிஸோரி பள்ளி

(iii) கிண்டர்கார்ட்டன்

(iv) நர்சரிப் பள்ளி

(v) பால்வாடி

(vi) அங்கன்வாடி

(vii) ஆய்வக நர்சரிப் பள்ளி

**செயல்பாடு – 1**

அருகிலுள்ள முன்பள்ளிக்கு சென்று, குழந்தைகளைக் கூர்ந்து கவனிக்கவும் அதனை அறிக்கையாகச் சமர்ப்பிக்கவும்.

### (i) பகல் நேர பராமரிப்பு மையம்

பகல்நேர பராமரிப்பு மையம் என்பது தனது தேவைகளுக்காக பிறரைச் சார்ந்துள்ள முன் பள்ளிப் பருவத்தினரை பகல் நேரத்தில் பராமரிக்கும் இடமாகும். இவ்வகைப் பராமரிப்பு குழந்தைகளின் பெற்றோர்கள், அவர்களோடு இல்லாத போது, அளிக்கப்படுகிறது. ஏனெனில் வேலைக்குச் செல்லும் பெற்றோர்களால், தங்களது முன் பள்ளிக் குழந்தைகளின் தேவையைப் பூர்த்தி செய்ய இயலுவதில்லை.

குழந்தைகளின் வீடு, உறவினர்களின் வீடு அல்லது பொதுவான மையங்களில் தத்துக் குழந்தைகள் (toddlers), முன் பள்ளி பருவத்தினர் மற்றும் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு, பகல் நேரத்தில் அளிக்கப்படும்

பராமரிப்பே பகல் நேர பராமரிப்பு எனப்படும். மைய அடிப்படையிலான குழந்தை பராமரிப்புக்கு குழந்தை பராமரிப்பு மையம் அல்லது பகல் நேர பராமரிப்புமையம்என்றுபெயர்.இம்மையங்கள், குழந்தைகளை பராமரிக்க உதவுகிறது. பொதுவாக, அதிகளவு பெற்றோர்கள், தங்களது குழந்தைகள் பாதுகாப்பாகவும், நன்றாக கற்கக் கூடிய சூழலைப் பெறுவதற்காகவும் பகல்நேரப் பராமரிப்பு மையங்களையே தேர்ந்தெடுக்கின்றனர்.

பகல்நேரப் பராமரிப்பு மையங்களில் பயிற்சி பெற்ற ஊழியர்கள் உள்ளனர். அவர்களது பணி மேற்பார்வையிடப்படுகிறது. ஊழியர்கள் விடுப்பில் இருந்தாலும், குழந்தைகளுக்கான பராமரிப்பு பணி தடைபடுவதில்லை. ஏனெனில், பராமரிப்பைப் பாதிக்காத அளவுக்கு தேவையான அனைத்து வளங்களும் உபகரணங்களும் பராமரிப்பு மையத்தில் உள்ளது. பகல்நேரப் பராமரிப்பு மையங்களில் உள்ள குழந்தைகளின் அறிவுசார் வளர்ச்சி அதிகளவில் மேம்படுத்தப்படுகிறது. இதற்கு காரணமாக விளங்குவது யாதெனில், பகல்நேரப் பராமரிப்பு மையங்களில் உள்ள குழந்தைகள், மற்ற குழந்தைகளோடு நெருங்கிய தொடர்பு கொள்வதற்கும், அதிகளவு கற்பிக்கும் சாதனங்கள் பயன்படுத்துவதற்கும் வாய்ப்புகள் கிடைப்பதேயாகும்.

செலவு அதிகமாக ஏற்படுதலும், ஊழியர்களின் பணி நிரந்தரமில்லாமல் இருத்தலும், பகல்நேரப் பராமரிப்பின் ஒரே குறைபாடாகும்.



உங்களுக்குத் தெரியுமா?

முன்பள்ளியில் கற்பிக்கப் பயன்படுத்தும் மொழி, தாய் மொழியாகவோ அல்லது வட்டார மொழியாகவோ இருத்தல் வேண்டும். ஏனெனில், இவ்வாறு கற்பிக்கப்படும் பொழுது, முன்பள்ளிப் பருவத்தினரின் வருங்கால உயர்படிப்புக்கு உதவியாக உள்ளது.

### குடும்ப அளவில் தரப்படும் குழந்தை பராமரிப்பு

குடும்ப குழந்தை பராமரிப்பானது, பராமரிப்பவரின் வீட்டிலேயே அளிக்கப்படுகிறது. இதுவும் ஒருவகையான குழந்தைப் பராமரிப்பு முறையாகும். பெற்றோர்கள், தங்களது குழந்தை, வீட்டுச் சூழலியே இருக்க வேண்டும் என்று விரும்பும் போது, இம்முறையைத் தேர்ந்தெடுக்கின்றனர். பகல்நேரப் பராமரிப்பு மையத்தோடு ஒப்பிடும் போது, இம்முறையில் செலவு குறைகிறது. மேலும், குழந்தைகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், சிறப்பான பராமரிப்பு குழந்தைகளுக்கு அளிக்கப்படுகிறது.

### வீட்டில் – குழந்தை பராமரிப்பு

இது குழந்தையின் வீட்டிலேயே, அளிக்கப்படும் பராமரிப்பு ஆகும். இதில் குழந்தை தனி கவனப் பராமரிப்பு பெறுகிறது. குழந்தை தன்னுடைய வீட்டிலேயே பத்திரமாகவும் பாதுகாக்கவும் இருப்பதாக உணர்கிறது. எந்த வகைப் பராமரிப்பு குழந்தைகள் பெறவேண்டும் என்பதை பெற்றோர்களே தீர்மானித்து, கட்டுப்படுத்துகின்றனர். இருப்பினும், இம்முறை அதிக செலவினை ஏற்படுத்தும் முறையாகும். பணிக்கு அமர்த்துபவரைப் பற்றிய பின்புலம் மற்றும் தொடர்ச்சியான மேற்பார்வை செய்தல், இம்முறையில் பெற்றோரின் சுமையாகும்.



## பகல்நேரப் பராமரிப்பு மையத்தின் முக்கியத்துவம்


ஊட்டச்சத்து நிறைந்த சிறந்த உணவுகளை அளிப்பதன் மூலம் குழந்தைகளின் உண்ணும் பழக்கங்கள் மேம்படுத்தப்படுகிறது. மேலும் நாள் முழுவதும் அவர்களின் உடல் மற்றும் மனத்தை, சுறுசுறுப்பாக வைக்கவும் உதவுகிறது. பகல் நேரப் பராமரிப்பு மையங்கள், குழந்தைகளின் சிறந்த எதிர் காலத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

## (ii) மாண்டிஸோரி பள்ளி

மரியா மாண்டிஸோரி என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட மாண்டிஸோரி பள்ளி உலகளவில் பிரசித்தி பெற்றதாகும். கற்பதில் புலனுணர்வுக்கும், அறிவுத்திறனுக்கும் ஒரு நெருக்கமான தொடர்பு இருப்பதாக மாண்டிஸரி நம்பினார்.

மாண்டிஸோரி பள்ளிக் கல்வியில், புலன்களுக்கு பயிற்சியளிப்பதே, படிப்பதற்கும், எழுதுவதற்கும் அடிப்படையாக விளங்குகிறது. பள்ளியில் நடைபெறும் ஒவ்வொரு செயல்பாடும், ஒரு கல்வி நோக்கத்தை கொண்டுள்ளது அநேகமான செயல்பாடுகள், குழந்தை தன்னைத் தானே சரிசெய்து கொள்வதன் மூலம், அதற்குரிய வேகத்தில் முன்னேற்றமடைவதற்கு உதவுகிறது. இச்செயல்கள் நடைபெறும்போது, எவ்விதமான அழுத்தமும், குழந்தைகளுக்கு தரப்படுவதில்லை.


> "குழந்தையை சுற்றியுள்ள சூழ்நிலையானது சிறப்பான தூண்டுணர்ச்சியை குழந்தைகளிடையே ஏற்படுத்தி, தாமாகவே ஆர்வமுடன் செயல்பாடுகளைச் செய்து அனுபவங்களைப் பெறவேண்டும்"
>
> **டாக்டர். மரியா மாண்டிசோரி**



பயிற்சியை/செயல்களை முடிக்க இயலாத குழந்தைகளுக்கு, எவ்விதமான தண்டனையும் வழங்கப்படுவதில்லை. மேலும், மாண்டிஸரி வகுப்பறையில் பொருட்களை வைப்பதற்கு குறிப்பிட்ட இடம் பயன்படுத்தப்படுகிறது. அது மட்டுமின்றி, குழந்தைகள் பொருட்களை எடுத்து, செயல்பாடு முடித்தவுடன், திரும்பவும் அதே இடத்தில் வைப்பதற்கு அறிவுறுத்தப்படுகிறது / பயிற்சி அளிக்கப்படுகிறது.

மாண்டிஸோரி பள்ளி பயிற்சியின் குறிப்பிடத்தக்க அம்சங்கள்

- குழந்தைகள் கற்பதற்கும், அறிவினைப் பெறுவதற்கும் அவர்களிடம் உள்ள உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொண்டு வர உதவும் நடைமுறை.
- குழந்தைகளுக்கு அளிக்கப்படும் கல்வியானது அவர்களின் தானாகக் கற்றுகொள்ளும் ஆர்வத்தைப் பொறுத்து அமைகிறது. பள்ளியில் அமைத்துத் தரப்படும் சூழ்நிலையும் அவர்களின் ஆர்வத்தைப் பூர்த்தி செய்வதாகவும், வழிநடத்துவதாகவும் உள்ளது.
- சிறந்த மற்றும் நிரந்தர கற்றலை ஏற்படுத்த குழந்தையின் தானே கற்கும் திறனுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.
- நடைமுறை வாழ்க்கை குறித்து பயிற்சியளித்தல் இதன் முக்கிய பகுதியாகும்.
- குழந்தைகள் தன்னைச் சார்ந்திருத்தல் மற்றும் திறமையாக இருப்பதற்கு



அளிக்கப்படும் பயிற்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. உதாரணம்: படித்தல், எழுதுதல் மற்றும் எண் கணித முறை.

- குழந்தைகளின் முன்னேற்றத்தில் முக்கிய பங்களிக்கும் விளையாட்டுகளுக்கு முக்கியத்துவம் தரப்படாதது, மாண்டிஸரி பள்ளிக் கல்வியின் குறைபாடாக உள்ளது.

**தகவல்**

குழந்தைகளிடையே தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கு/ஏற்படுத்துவதற்கு, மற்ற குழந்தைகளின் முன்பு, கதை சொல்லுதல், பாடல் இசைத்தல், அனுபவத்தை விவரித்தல், சுதந்திரமாகப் பேசுதல் போன்ற செயல்களை ஊக்குவித்தல் வேண்டும்.

### (iii) கிண்டர் கார்ட்டன்

கிண்டர் கார்ட்டன் பள்ளியை தோற்றுவித்தவர் பிரடெரிக் ஃப்ராபெல் என்பவர் ஆவார். ஜெர்மன் மொழியில் "கிண்டர் கார்ட்டன்" என்பதற்கு "குழந்தைகளின் தோட்டம்" என்பது பொருளாகும். இக்கல்வியின் அணுகுமுறையானது விளையாடுதல், பாடுதல், நடைமுறை செயல்பாடுகளான வரைதல் மற்றும் சமூகத் தொடர்புகள் போன்றவற்றின் அடிப்படையாக விளங்குகிறது.

கிண்டர் கார்டனில், குழந்தைகள் சமூக அளவிலும், மன அளவிலும் வளர்ச்சியுறுகிறார்கள். இதனுடன், முக்கியமாக திறம்படக் கற்றுக்கொள்ளும் கலையையும் கற்றுக் கொள்கிறார்கள். குழந்தைகள், தங்களின் தொடர்பு திறனை வளர்த்துக்கொண்டு விரிவுபடுத்தவும் தன்னம்பிக்கையை வளர்க்கவும் ஆக்கப்பூர்வமாக இருக்கவும் உதவுகிறது. மேலும் குழந்தைகள் படித்தல், எழுதுதல் மற்றும் கணக்குப் பாடத்தில் திறன்களை உருவாக்கவும் உதவுகிறது.



பிரடெரிக் ஃப்ராபெல்

மனித வளர்ச்சியில், குழந்தைப்பருவத்தின் போது அவர்களது ஆத்மார்த்தமான எண்ணங்களை சுதந்திரமாக அதிகளவில் வெளிப்படுத்தும் ஒரு செயலாக விளையாட்டு இருக்கிறது. **- ஃப்ராபெல்**

"குழந்தைகள் அழகிய சிறுமலர்களைப் போன்றவர்கள் பலவிதமானவர்கள் மற்றும் சிறப்பு கவனம் தேவைப்படுபவர்கள், ஆனால் ஒவ்வொருவரும் தனித்தனியாக அழகானவர்கள். தங்கள் வயது சமுதாயத்தினரோடு பார்க்கும் போது புகழ் பெற்றவர்கள்" **- ஃப்ராபெல்**

### (iv) நர்சரி பள்ளி

மாக்மிலன் சகோதரிகள், 1911 ஆம் ஆண்டு லண்டனில் முதன் முதலாக நர்சரி பள்ளியை ஆரம்பித்தனர். இந்தியாவில் நகர்ப்புறங்களில் ஆரம்பிக்கப்பட்ட முன் பள்ளிக்கு, நர்சரி பள்ளி என்று பெயர்.



XII Std - Home Science TM_Unit 6.indd 186 07-12-2021 12.59.16 PM



இவ்வகை பள்ளிகள் பின்வருவனவற்றை வலியுறுத்துகிறது.

- **படைப்பாற்றல்:** இது குழந்தைகளுக்கு வெளிப்படையான செயல்பாடு, விளையாட்டு, கலை மற்றும் இயக்கம் ஆகியவற்றை அளிப்பதன் மூலம் உருவாக்கப்படுகிறது.
- **கற்பனைத்திறன்:** குழந்தைகளிடத்தில், இயற்கையாகவே வளரக்கூடிய தன்மையுடன் இருப்பது கற்பனையாகும். இதனை ஊக்கப்படுத்தும் போது, அவர்களின் பல்வேறு வகையான வளர்ச்சிகள் மேம்படுத்தப்படும்.
- **தன்னைத் தானே கவனித்துக் கொள்ளும் திறன்:** சுய அக்கறை திறன்கள், புலனணுர்வு இயக்க கற்றல் மற்றும் கல்வி கற்பதற்காக தன்னைத் தயார்படுத்திக் கொள்ளுதல் போன்றவை குழந்தைகளிடத்தே உருவாக்கப்படுகிறது.

**செயல்பாடு – 2**

பல வண்ணமணிகள் மற்றும் கம்பியை குழந்தைகளுக்குக் கொடுத்து. ஆசிரியரின் மேற்பார்வையில் குழந்தைகளை கம்பியில் மணியை கோர்க்கச் செய்தல்.

### (v) பால்வாடி

பால்வாடி என்பது உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கற்பிக்கும் சாதனங்களைப் பயன்படுத்தி அறிவியல் பூர்வமாக "கிராமப்புறங்களில் நடத்தப்படும் பொருளாதாரச் சிக்கனமாகக் கற்பிக்கப்படும் முன் பள்ளி ஆகும்" என்று கிரேவால் வரையறுத்துள்ளார்.

பால்வாடி, கிராமப்புறப் பகுதியில் செயல்படும் முன் பள்ளி ஆகும். சமூக நல வாரியத்தின் மூலமாக பண உதவி அளிக்கப்பட்டு, மாநில அரசால் நடத்தப்படுகிறது. இங்கே, அனைத்து குழந்தைகளுக்கும் உணவு இலவசமாக அளிக்கப்படுகிறது. முன் பள்ளி உள்ள பகுதியில் பிராந்திய மொழியே, கற்பிக்கும் மொழியாக பயன்படுத்தப்படுகிறது. முன் பள்ளியில், கல்வி இலவசமாகவும் விளையாட்டின் மூலமாகவும் கற்பிக்கப்படுகிறது. இரண்டு வயதுக்கு குறைவான குழந்தைகளுக்கு குழந்தை காப்பக வசதியும் பால்வாடியில் தரப்படுகிறது. பால்வாடி பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பத்தைச் சார்ந்த குழந்தைகளுக்கு முன் பள்ளிக் கல்வியினை அளிக்கிறது. கிராமப் புறக் குழந்தைகளின் உடல் மற்றும் மன வளர்ச்சியை பள்ளி மற்றும் வீட்டில் பெறுவதை உறுதி செய்வது பால்வாடியின் முக்கிய நோக்கமாகும்.



பால்வாடி

### (vi) அங்கன்வாடி

அங்கன்வாடி என்பது கிராமப்புறங்களில் குழந்தைகளுக்காக நடத்தப்படும் பராமரிப்பு மையம் ஆகும். இம்மையமானது, இந்திய அரசால் 1975 ஆம் ஆண்டு, ICDS திட்டத்தின் மூலம், முன் பள்ளிப் பருவத்தினரிடம் காணப்படும் ஊட்டக்குறைவினை நீக்குவதற்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரு திட்டமாகும். இம்மையத்தில், குழந்தைகளுக்கு முறை சாரா கல்வி அளிக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட பாடத்திட்டம் இக்குழந்தைகளுக்கு கல்வி அளிக்க பின்பற்றப்படுவதில்லை.



XII Std - Home Science TM_Unit 6.indd 187 07-12-2021 12.59.18 PM

பாடல்கள் மற்றும் கதைகள் மூலமாக குழந்தைகளுக்கு கற்பிக்கப்படுகிறது. முன் பள்ளி குழந்தைகளிடையே காணப்படும் ஊட்டச்சத்து குறைவு மற்றும் ஊட்டக் குறைவு நோய்களை முழுவதுமாக நீக்குவதற்காக, அவர்களுக்கு வருடத்தின் அனைத்து நாட்களிலும் இம்மையத்தில் துணை உணவு அளிக்கப்படுகிறது.



### (vii) ஆய்வக நர்சரி பள்ளி

மனையியல் துறை உள்ள கல்லூரிகளில், குழந்தைகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை கண்காணிப்பதற்காக, ஆய்வக நர்சரி பள்ளி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இங்கு, முறைசாரா கல்வி முறையே அனுசரிக்கப்படுகிறது. கல்லூரியில் மனையியல் கல்வி பயிலும் மாணவிகள், முன் பள்ளி குழந்தைகளின் ஒவ்வொரு வளர்ச்சி நிலையையும், அக்குழந்தைகள் அறியாமலேயே அவர்களை உற்று நோக்கி அறிந்து கொள்வதற்கு, ஆய்வக நர்சரி பள்ளி உதவுகிறது.

**குழந்தைகள் காப்பகம் ஏன் ஆரம்பிக்க வேண்டும்?**

பெற்றோர்கள் இருவரும் வேலைக்குச் செல்வது தற்சமயம் பொதுவாக, காணப்படுகிறது. குழந்தை காப்பகம் என்பது பெற்றோருக்கு மாற்றாக, குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் இடமாகும்.

## 6.5 குழந்தைகள் காப்பகம் அமைத்தல் / பகல் நேர பராமரிப்பு மையம் அமைத்தல்

பகல் நேரப் பராமரிப்பு மையத்தை, வீடு அல்லது தனியாக அமைத்து நடத்தப்படும் பொழுது சில விதிமுறைகளை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும்.

பகல் நேரப் பராமரிப்பு மையத்தினை அமைப்பதன் படிகள்:

தேவைப்படும் பகல்நேர பராமரிப்பு வகையைக் கண்டறியவும்.

- வீடு
- தனி இடம்

### வீடு

- விலை மலிவானது, ஏனெனில் சொந்த வீடாக இருப்பதால், வாடகை தர வேண்டிய அவசியம் இல்லை.
- குறிப்பிட்ட எண்ணிக்கையில் மட்டுமே, குழந்தைகள் சேர்க்கப்பட வேண்டும்.
- ஒரே இடத்தில் வாழ்வதும் வேலை செய்வதும் மன அழுத்தத்தை ஏற்படுத்தும்.

### தனி இடம்

- மையத்திற்கு பொருத்தமான வர்த்தக இடத்தினை தேர்வு செய்ய வேண்டும்.
- செலவு அதிகமாகும்.
- செலவினங்களை ஈடுசெய்வதற்காக, அதிக எண்ணிக்கையில் குழந்தைகள் சேர்க்கப்பட வேண்டும்.
- வீட்டு சம்பந்தப்பட்ட வேலைகள் மற்றும் தொழில் சார்ந்த வேலைகளை சரியான அளவில் சமன்படுத்த தெரிய வேண்டும். இல்லையெனில், விரும்பத்தகாத சம்பவங்கள் ஏற்படலாம்.

### பகல்நேரப் பராமரிப்பு மையத்திற்கு உரிமம் மற்றும் அங்கீகாரம் பெறுதல்

முன் பள்ளி நிறுவனத்தை ஆரம்பித்தலுக்கு முன் எவ்வகையான உரிமம் மற்றும் அங்கீகாரம் பெற வேண்டும் என்பதை



XII Std - Home Science TM_Unit 6.indd 188 07-12-2021 12.59.19 PM

அறிந்து கொள்வது முக்கியமானதாகும். கீழ்க்கண்ட வழிமுறைகள், மையம் அமைக்கப்படும்போது பின்பற்றப்பட வேண்டும்.

- **இட அங்கீகாரம்:** தேர்ந்தெடுக்கப்படும் இடமானது, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தரங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.
- **பின்னணி சோதனை:** மையம் நடத்துவதற்காக தேவைப்படும் நபர்கள் குடும்பத்திலுள்ள பெரியவர்களோ அல்லது பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர்களாகவோ இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- **தேவைப்படும் பயிற்சி:** ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.
- **தொழில் உரிமம்:** பொது உரிமம் பெறுதல் அல்லது தனி உரிமம் பெறுதல் போன்றவை பகல் நேரப் பராமரிப்பு மையம் செயல்படுவதற்கு தேவைப்படுகிறது.

### குழந்தைகள் காப்பகம் அமைத்தல்

பெற்றோர்கள் வேலை நிமித்தமாக வெளியில் இருக்கும் சூழலில், குழந்தையைக் கவனிப்பதற்கு உள்ள இடமே குழந்தைகள் காப்பகம் ஆகும்.

குழந்தைகள் காப்பகம் தொடங்கும் பொழுது, பல்வேறு காரணங்களால் சவாலான விஷயமாக உள்ளது. இதற்கு பின்பற்றப்படும் விதிகளும், நிபந்தனைகளுமே காரணமாகும். ஏனெனில், குழந்தைகளோடு மிக நெருங்கி பழக இருப்பதால், அதிக அளவு கவனம் செலுத்தப்பட வேண்டியது முக்கியமாகும். இலாபம் குறைவாகவும், செலவினங்கள் அதிகமாகவும் இருப்பதால் குழந்தைகள் காப்பகம் நடத்துவது கடினமான செயலாகும். எனினும், குழந்தைகள் காப்பகம் நடத்துவது பெருமைக்குரிய விஷயமாகும்.

### குழந்தைகள் காப்பகம் ஊழியர்களுக்கு தேவைப்படும் திறன்கள்

- பொறுமை
- நேர மேலாண்மை
- நேரத்திற்கு நேர கவனிப்பு
- உற்சாகம்
- கருத்துப் பரிமாற்ற திறன்கள்
- தீர்மானிக்கும் திறன்கள்

குழந்தைகள் காப்பகத்திற்கு, அங்கீகாரம் கிடைப்பதற்கு பின்வரும் வசதிகள் கண்டிப்பாக இருக்க வேண்டும். அவையாவன.

- உணவு உண்ணுதல், தூங்குதல், விளையாடுதல் மற்றும் பிற செயல்பாடுகளுக்கு, ஒரு குழந்தைக்கு தேவைப்படும் இடத்தின் அளவு.
- ஆசிரியர் – குழந்தைகள் விகிதம்
- குறைந்தபட்ச கழிப்பறை மற்றும் கை கழுவும் வசதி
- வளாகப் பாதுகாப்பு
- வாகனங்கள் நிறுத்த போதுமான இடம்
- குழந்தைகளின் மன, சமூக மற்றும் உடல் நலம் மேம்படுத்துதல்

பெற்றோர்கள் தேடி, ஆராய்ந்து, குழந்தைகள் காப்பகத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தங்களது குழந்தைக்கு சிறந்த பராமரிப்பு மையத்தை தேர்ந்தெடுத்த நம்பிக்கையை பெற்றோர் பெற வேண்டும்.

பெற்றோர்கள் தங்களது குழந்தைகள் தேர்ந்தெடுத்த மையத்தில் சௌகரியமாகவும் பாதுகாப்புடனும், மகிழ்ச்சியுடனும் இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும் மனநலம் மற்றும் உடல் வளத்தைப் பெறுவதற்கு முக்கியத்துவம் அளித்திடல் வேண்டும்.

## 6.6 முன் பள்ளி கல்வி கட்டடத் தேவைகள்

சிறந்த முன் பள்ளிக்கான இடம் மற்றும் கட்டிட வசதி ஒன்றுக்கொன்று தொடர்புடைய காரணிகளாகும். "வாழும் கலையை" கற்றும் கொள்ளும் இடமாக முன் பள்ளி விளங்குகிறது. ஆனால்,

திட்டமிடப்பட்ட எந்தவொரு பாடத்திட்டமும் முன் பள்ளியில் பின்பற்றப்படுவதில்லை. முன் பள்ளியில் பெறப்படும் சூழல், குழந்தைகளின் குறிக்கோளை உணர்த்துவதற்கு உதவுகிறது. இக்குறிக்கோளை அடைவதற்கு, முன் பள்ளியானது, குழந்தையின் வளர்ச்சியைத் தூண்டக்கூடியதாகவும், இணக்கமான சூழ்நிலையை ஏற்படுத்தித் தருவதாகும் இருக்க வேண்டும்.



சுத்தமான, மகிழ்ச்சியான மற்றும் நன்கு பராமரிக்கப்பட்ட பள்ளிக் கட்டிடம், குழந்தைகளின் "வாழும் கலையை" அடைவதற்கு உதவுகிறது.

முன் பள்ளிக் குழந்தைகள், பகல்நேரத்தில், அதிகப்படியான நேரத்தை பள்ளி வகுப்பறை மற்றும் விளையாட்டுத்திடலிலேயே கழிக்கின்றனர். கட்டடத்தின் பல்வேறு சாதகமான சூழல்களே குழந்தைகளின் நடத்தையினைத் தீர்மானிக்கின்றன. முன் பள்ளிக் கட்டிட அமைப்பு, பள்ளி சூழல், வடிவமைப்பு, வெளிச்சம் மற்றும் காற்றோட்ட வசதி போன்றவை முன் பள்ளி குழந்தைகளின் நடத்தை மற்றும் நலத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

## முன் பள்ளியின் கட்டிட அமைப்பின் முக்கியத் தேவைகள்

முன் பள்ளி குழந்தைகள் பலவிதமான செயல்பாடுகளைச் செய்வதற்கும், தன்னையொத்த வயதினருடன் விளையாடுவதற்கும் ஏற்ற இடமாக முன் பள்ளி விளங்குகிறது. நன்கு திட்டமிடப்பட்ட சிறந்த கட்டிடமாக முன் பள்ளியை உருவாக்குவது உரிமையாளரின் பொறுப்பாகும்.

ஒரு நல்ல முன் பள்ளி கட்டடத்தின் முக்கியத் தேவைகளாக இருப்பவைகளுள்

(i) சுற்றுப்புறச் சூழ்நிலை
(ii) இட அமைப்பு
(iii) கட்டட வரைபடம்

போன்றவை அடங்கும்.

### (i) சுற்றுப்புறச் சூழ்நிலை

குழந்தைகளின் ஆரோக்கியம், மனப்பான்மை மற்றும் ஆளுமைத் திறன் வளர்ச்சி போன்றவை அதிக அளவில் சுற்றுப்புற சூழலால் பாதிக்கப்படுகிறது. எனவே பள்ளி இந்த செயல்பாடுகளை செம்மையாக நிறைவேற்றிட முன் பள்ளிக் கட்டடத்தினை எங்கோ அல்லது ஏதோ ஓர் இடத்திலோ கட்ட முடியாது. குழந்தைகளின் மன, மற்றும் உடல் வளர்ச்சியை ஏற்படுத்துவது முன் பள்ளியின் நோக்கமாக இருப்பின், அது நிறைவேறிட முன் பள்ளியானது சாதகமான இடத்தில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். சுகாதாரமற்ற சூழ்நிலை குழந்தைகளின் உள்ளத்திற்கும், உடலுக்கும் கேடு விளைவிக்கக் கூடியதாக உள்ளது. விரும்பத்தகாத சூழ்நிலை குழந்தைகளின் நடத்தையில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்துகிறது.

### (ii) இட அமைப்பு

இடஅமைப்பு என்பது முன் பள்ளி கட்டுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதியாகும். இடஅமைப்பைச் சார்ந்தவை:

(அ) பள்ளியின் சுற்றுவட்டம்
(ஆ) மண் அமைப்பு
(இ) அமைப்பும், முன் முகத் தோற்றமும்

#### (அ) பள்ளியின் சுற்றுவட்டம்

பள்ளியின் சுற்றுவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தைக் குறிக்கிறது. பள்ளிக்கு அருகில் உள்ள சுற்றுப்புறம் புத்துணர்வினை அளிப்பதாக இருக்க வேண்டும்.



XII Std - Home Science TM_Unit 6.indd 190 07-12-2021 12.59.20 PM

பள்ளியின் அருகில் தேங்கிய தண்ணீர் பரப்பு, குளம், ஏரி, சேறு மற்றும் துர்நாற்றம் இல்லாத அமைப்பாகவும், கொசு, ஈக்கள் மற்றும் நுண்கிருமிகள் இல்லாமலும் இருத்தல் வேண்டும். நல்ல தண்ணீர் வசதியுடன் இருத்தல் அவசியமாகும்.

பள்ளிக் கட்டிடமானது, நகர்ப்புறத்தை விட்டு சற்றுத் தள்ளி தூய்மையான காற்றோட்ட வசதியுடனும் நோய் தாக்கத்தலிருந்து விடுபடக்கூடிய அமைப்பிலும் இருக்க வேண்டும். நகர்ப்புறத்தை விட்டு, முன் பள்ளி கட்டிடம் தள்ளி இருப்பதனால், நிலத்தின் விலை மலிவாகவும் அல்லது வாடகை குறைவாகவும் கிடைக்கும்.

முன் பள்ளிக்கட்டிடம் சாலைக்கு அருகில் இருக்க வேண்டும். ஆனால் ஆபத்தை விளைவிக்கக் கூடியதாக இருக்கக் கூடாது. எனவே, சாலையை விட்டு சற்று உள்ளே தள்ளியிருக்க வேண்டும். சுடுகாட்டிற்கு அருகில் இல்லாமல் இருத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட இடமானது, பள்ளியின் எதிர்கால விரிவாக்கத்திற்கு ஏற்ற அமைப்புடன் இருக்க வேண்டும். பள்ளியையொட்டி தொழிற்சாலையின் சத்தம், தூசி, புகை, கழிவுகள் இல்லாமல் இருத்தல் வேண்டும். ரயில் நிலையம், பேருந்து நிலையம், நிறுவனங்களை விட்டு சற்றுத் தள்ளியும் இருத்தல் வேண்டும். பள்ளியின் அருகிலோ அல்லது பள்ளி வளாகத்தினுள்ளோ பூங்காக்கள் அமைந்திருந்தால், குழந்தைகளிடையே அழகினை ஆராதிக்கும் பண்பினை ஏற்படுத்தும்.

> **உங்களுக்குத் தெரியுமா?**
>
> இயற்கையை ரசித்து நடத்தல் என்பது குழந்தைகளை தோட்டம், பூங்காக்கள் போன்றவற்றிற்கு அழைத்துச் செல்லுதல் ஆகும். இவ்வாறு அழைத்துச் செல்லும் போது, பார்ப்பதைக் குறித்து, குழந்தைகள் பேசுதல் / உரையாடுதல், மூலம் அவர்களின் மொழி வளர்ச்சிக்கு முக்கிய பங்கினை அளிக்கிறது.

### (ஆ) மண் அமைப்பு

பள்ளிகட்டிடம் உறுதியாகவும், பாதுகாப்பானதாகவும், கற்பதற்கு ஏற்றதாகவும் அமைவதில் மண் வகை முக்கியமானதாக உள்ளது. பள்ளிக் கட்டிடம் அமையும் இடம் மேடானதாகவும்/உயர்ந்த மேற்பரப்புடையதாகவும், ஈரமற்றதாகவும், தண்ணீர் தேங்காமல் வடியும் தன்மையுடனும் இருக்க வேண்டும்.

### (இ) அமைப்பும் முன் முகத் தோற்றமும்

பள்ளிகட்டிடம் தெற்கு நோக்கியிருப்பது உயர் சிறப்புடையதாக கருதப்படுகிறது.

- நல்ல வெளிச்சம் வரத் தக்க வகையில் வராண்டா (verandah) ஒரே ஒருபுறம் மட்டுமே அமைக்கப்பட வேண்டும்.
- மரங்கள் மற்றும் செடிகளை பள்ளியில் வளர்ப்பது வெயில் காலங்களின், வெப்பத் தாக்கத்தினைத் தடுக்க உதவுகிறது.

> **உங்களுக்குத் தெரியுமா?**
>
> - தெற்கு நோக்கிய கட்டிட அமைப்பு சூரியனின் வெப்பத்தினை உள்வாங்கிக் கொண்டு, குளிர்க்காலத்தில் கட்டடத்தினை வெதுவெதுப்பாக வைத்திருக்க உதவுகிறது.
> - தாழ்வாரம் அல்லது மறைவு கட்டடத்தின் தேவைப்படும் இடத்தில் அமைப்பதன் மூலம் வெயில் காலங்களில் கட்டிடம் குளுமையாக இருப்பதற்கு உதவுகிறது.
> - கட்டடத்தை இவ்வாறு அமைப்பதன் மூலம் வெப்பம் மற்றும் குளுமையினை ஏற்படுத்த ஏற்படும் செலவு 85 சதவிகிதம் குறைகிறது.



XII Std - Home Science TM_Unit 6.indd 191 07-12-2021 12.59.22 PM

### கட்டிட வரைபடம்

பள்ளியின் வகையினைப் பொறுத்து கட்டிட அமைப்பு மாறுபடக் கூடியது. கட்டிட வரைபடம் பின்வரும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட வேண்டும்.

- பள்ளிக் கட்டிடம் சுகாதார விதிகளைக் கண்டிப்பாக பின்பற்றியும், சுத்தமாக இருத்தல், அனைத்து அறைகளுக்கும் காற்றோட்டம் மற்றும் சூரிய வெளிச்சம் கிடைக்கும் படியும் இருத்தல் அவசியம்.
- காற்றோட்ட வசதி அனைத்து அறைகளுக்கும் தடையின்றி கிடைத்தல்
- விளையாட்டு அறைகளுக்கான குறைந்தபட்ச தேவையினைப் பூர்த்தி செய்தல், ஆய்வக வசதி, கழிப்பறை மற்றும் கை கழுவும் வசதிகள் கண்டிப்பாக இருத்தல் வேண்டும்.
- பாதுகாப்பு மற்றும் வசதி போன்ற காரணங்களுக்காக ஒற்றை அடுக்கு கட்டிட அமைப்பிற்கு முன்னுரிமை அளித்தல் அவசியம்.
- முதலுதவி வசதிகள் மற்றும் நோயுற்ற குழந்தைகளை பராமரிப்பதற்கு தனியான அறையும் அமைதல் அவசியம்.
- அவசர காலத்தில், பாதுகாப்பாக வெளியேறுவதற்கான வசதியும், தீயணைப்புக் கருவியும் பள்ளியில் இருக்க வேண்டும்.

**அட்டவணை 6.1**

விளையாட்டு அறை அடிப்படையில் முன் பள்ளிக்கு தேவைப்படும் இட அமைப்பு

| வகைகள் | கட்டப்படும் பரப்பளவு | மொத்த பரப்பளவு |
|---|---|---|
| விளையாட்டு அறை இரண்டு உள்ள முன் பள்ளி வகை | 218 சதுர மீட்டர் | 318 சதுர மீட்டர் |
| ஒரேயொரு விளையாட்டு அறை உள்ள முன் பள்ளி வகை | 164 சதுர மீட்டர் | 264 சதுர மீட்டர் |

**Source:** Sushila Srivastava, Sudha Rani K, Textbook of Human Development-A Lifespan Developmental Approach (2014)

### அறைகள்

- குழந்தைகளின் செயல்பாடு, தடையின்றி எளிதாக நடைபெற செவ்வக வடிவ அறை சிறப்பானது.
- ஒவ்வொரு அறையிலும் உள்ளே செல்லவும், வெளியேறவும் வழிகள் தனியாக அமைக்கப்படல் வேண்டும்.
- உள் விளையாட்டு அறைகள், விளையாடுவதற்கு ஏதுவாக பெரியதாக இருத்தல் வேண்டும்.
- குழந்தைகள் வகுப்பறையில் சுற்றிவருவதற்கு ஏதுவாகவும் பெரிய அறைகள் இருப்பது அவசியம்.
- ஒவ்வொரு குழந்தைக்கும் குறைந்த பட்சம் 1.5 சதுர மீட்டர் தரை பரப்பளவு இருக்க வேண்டும். தரை பரப்பளவிலிருந்து, மேற்கூரைக்கு இடையே உள்ள தூரமானது 3 மீட்டரும் அதற்கு மேலும் இருக்கலாம்.

### சுவர்கள்

- சுவரின் அமைப்பு தேவைக்கேற்றவாறு, பலவிதமான வேலை செய்வதற்கு உதவுவதாகவும் இருக்க வேண்டும்.
- படங்கள் மாட்டப்பட்டிருக்கும் பலகை குழந்தைகளின் கண் பார்வைக்கு ஏற்ற வகையில் பொருத்தமான உயரத்தில் இருக்க வேண்டும்
- மகிழ்ச்சி அளிக்கக்கூடிய இனிமையான வண்ணங்களில், சுவர்களில் வர்ணம் பூசப்பட்டிருக்க வேண்டும்.
- ஜன்னல்கள் மற்றும் கதவுகள், புல்லட்டின் போர்டுகள் மாட்டுவதற்கான இட வசதியை உண்டாக்கும் வகையில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- சுவர்களில் பூசப்படும் வர்ணமானது, பொருத்தமானதாகவும், எளிதில் சுத்தம் செய்யக் கூடியதாகவும், சத்தத்தை உள்ளடக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.



XII Std - Home Science TM_Unit 6.indd 192 07-12-2021 12.59.22 PM

**தகவல்**

முன்பள்ளியில் அமைக்கப்படும் கரும்பலகையானது, குழந்தைகள் வரைதல், இஷ்டப்படி கிறுக்குதல் போன்ற மேலும் பல செயல்களுக்கு உதவும் வகையிலான உயரத்தில் அமைக்கப்பட வேண்டும்.

### தரை

- தரையானது, சுத்தம் செய்வதற்கு எளிதானதாகவும், சிறந்த சுகாதாரமான சூழலைப் பராமரிப்பிற்கு உதவுவதாகவும் இருத்தல் வேண்டும்.

### ஜன்னல் மற்றும் கதவுகள்

- ஜன்னல் மற்றும் கதவு அமைக்கப்படும் இடம் மிகுந்த கவனத்துடன் தேந்தெடுக்கப்படல் வேண்டும்.
- ஜன்னல் அமைக்கப்படும் உயரம், குழந்தைகள் எட்டிப் பார்க்க உதவும் உயரத்தில் அமைதல் வேண்டும். ஜன்னலில், மறைவுகள் அமைத்தல் வேண்டும்.'
- குழந்தைகள் பயன்படுத்துவதற்கு எளிதான வகையில் கதவுகள் எடை குறைவானதாக இருத்தல் வேண்டும்.
- கதவின் கைப்பிடி குழந்தைகள் எளிதில் தொடக் கூடிய வகையில் அமைத்தல் வேண்டும்.
- குழந்தைகள் கதவினை திறந்து மூடும்போது காயங்கள் ஏற்படாத வகையில் அமைக்கப்பட வேண்டும்.

### சுகாதார வசதிகள்

- முன் பள்ளியில் கழுவி, சுத்தப்படுத்து வதற்கு தேவையான அளவு தண்ணீர் வசதிகள் இருக்க வேண்டும்.
- பத்து குழந்தைகளுக்கு ஒரு கழிப்பறை வசதி அவசியமாக இருத்தல் வேண்டும்.
- கழிப்பறை சாதனங்கள், உட்காரும் வகையில் தரையிலிருந்து 25 செ.மீ முதல் 30 செ.மீ உயரத்தில் இருப்பது விரும்பத்தக்கது.



- கழிப்பறையில் அமைக்கப்பட்டிருக்கும் தரையானது எளிதில் கழுவக் கூடிய வகையிலும், வழுக்காமலும் இருக்க வேண்டும்.

### சேமிக்கும் இடம்

- குழந்தைகள் தங்கள் விளையாட்டுப் பொருட்கள், துண்டுகள், புத்தகங்கள், கல்வி சாதனங்கள் மற்றும் பதிவேடுகளை வைப்பதற்குப் போதுமான சேமிக்கும் இடம் அவசியம்.
- சேமிக்கும் இடம் நன்கு காற்றோட்ட வசதியுடனும் பூச்சிகள் மற்றும் ஒட்டடை இல்லாமலும் இருதல் வேண்டும்.

**செயல்பாடு – 3**

குழந்தைகளிடையே ஆக்கப்பூர்வமான செயல்களை ஏற்படுத்துவதற்காக, ஆசிரியரின் மேற்பார்வையில் பின்வரும் செயல்களை, செய்து காட்டச் சொல்லவும். எதுவும் சொல்லித்தரமால் ஆசிரியர் செயல்பாட்டிற்கான இடமும், பொருட்களும் மட்டும் தயார் செய்து தரவும்.

- குழந்தைகளுக்கு வண்ண சாக்குக் கட்டிகளைத் அளித்தபின், சிலேடு அல்லது கரும்பலகையில் கிறுக்க சொல்லவும்.
- மணல்பகுதியை ஈரப்படுத்தவும் குழந்தைகளிடம் ஒரு குச்சியை அளித்து, மனம் போல் ஈரமணலில் வடிவங்களை வரையவோ/கிறுக்கவோ சொல்லவும்.



XII Std - Home Science TM_Unit 6.indd 193 07-12-2021 12.59.23 PM

- அளவில் பெரிய பொம்மைகள் மற்றும் அடுக்குக் கட்டைகள் வைப்பதற்கும் இடம் தரப்பட வேண்டும்.

### வெளிப்புற இடம்

குழந்தைகளின் மிகவும் முக்கியமான தேவை விளையாட்டு மைதானம் ஆகும். பரப்பளவில் அதிகமானதாகவும், பாதுகாப்பானதாகவும் இருக்க வேண்டும். ஒரு குழந்தைக்கு குறைந்த பட்ச தேவையான இடம் 2 சதுர மீட்டர் அளிக்கப்பட வேண்டும். விளையாடும் மைதானம், பரப்பளவில் சிறியதாக இருப்பின் அட்டவணை திட்டமிடப்பட்டு குழந்தைகளை விளையாட அனுமதிக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம், அனைத்துக் குழந்தைகளும் ஒரே நேரத்தில் வெளியே விளையாட வருவதை தவிர்க்க இயலும்.



விளையாட்டு மைதானத்திற்கான சில விவரக்குறிப்புகள் பின்வருமாறு:

- மணல் விளையாட்டு இடவசதி.
- நீர் விளையாட்டு இடவசதி.
- சக்கரத்தில் சுழலும் பொம்மைகள் மற்றும் குதிக்கும் பந்து போன்றவைகளுக்கான இடவசதி (இப்பகுதியின் தரையானது சாதாரணமாக சற்று கடினத் தன்மையுடன் இருத்தல் அவசியம்).
- குழந்தைகள் குதித்தோடி விளையாடுவதற்கான புல்வெளிப் பகுதி.
- செல்லப்பிராணிகள் மற்றும் தோட்டம் அமைப்பதற்கான இட வசதி.

**செயல்பாடு – 4**

நர்சரி பள்ளியைப் பார்க்கச் செல்லும் சமயத்தில் நுண் இயக்கத் திறன் வளர்ச்சிக்கான செயல்களை செய்வதற்கு ஊக்கப்படுத்தவும்.

- களிமண் செயல்பாடு: குழந்தைகளிடம் களிமண்ணைத் தரவும். அவர்களுக்குப் பிடித்த உருவம் அல்லது வடிவம் செய்து காட்டச் சொல்லவும்.
- துணி அல்லது காகிதத்தின் மீது (காய்கறி அச்சிடுதல்) வடிவமாக செதுக்கப்பட்ட காய்கறிகளை குழந்தைகளிடம் தரவும். அதோடு, காகிதம்/துணி, பெயிண்ட்/நீர் வர்ணங்களையும் தரவும். குழந்தைகளை, வடிவம் செய்யப்பட்ட காய்கறிகளில் பெயிண்ட/நீர் வர்ணங்களைத் தோய்த்து, துணி/காகிதத்தின் மீது பதிக்கச் சொல்லவும். நறுக்கப்பட்ட வெண்டைக்காய் கத்தரிக்காய், உருளைக்கிழங்கு போன்றவற்றை அச்சிடுவதற்குப் பயன்படுத்தலாம்.

## 6.7 உட்புறம் மற்றும் வெளிப் புறங்களில் பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகள்:

சிறுவர், சிறுமியர் இருவருக்கும் தனித்தனியாக குழந்தை நட்புறவு மற்றும் ஊனமுற்றவர் நட்புறவு செயல்பாட்டு கழிப்பறைகள் இருக்க வேண்டும்.

- குழந்தைகளுக்கு விபத்து ஏற்படாமல் பாதுகாக்க வகுப்பறையில், அனைத்து செயற்பாடுகளுக்கும் போதுமான அளவு இடவசதி இருக்க வேண்டும்.

- மேஜை, நாற்காலி மற்றும் விளையாட்டு பொருட்கள் போன்றவை கூரான முனை இல்லாமல் குழந்தைகள் நட்புறவாக இருத்தல் வேண்டும்.
- கதவுகள் மெல்லியதாகவும், தானாகவே பூட்டிக் கொள்ளாதவாறும், மூடிக் கொள்ளாதவாரும் இருத்தல் வேண்டும்.
- கொசுக்களிலிருந்து பாதுகாக்க அனைத்து ஜன்னல்களிலும் கொசுவலை பொருத்தியிருக்க வேண்டும்.
- அனைத்து விளையாட்டு பொருட்கள்/ உபகரணங்களிலும் நஞ்சு ஏற்படுத்தும் வர்ணம் இருக்கக்கூடாது. மேலும் உபகரணங்கள் கூர்முனை, நீட்டியுள்ள ஆணி போன்றவை இல்லாமலும், உறுதியானதாக இருத்தல் நன்று.
- விளையாட்டு பொருட்கள் எந்த தளர்வான பகுதிகளையும் கொண்டிருக்கக்கூடாது. தவறுதலாக அவற்றை குழந்தைகள் விழுங்க வாய்ப்புள்ளது.
- குழந்தைகளை விபத்துகளிலிருந்து காக்க, வெளி விளையாட்டு உபகரணங்களை சரியான முறையில் பராமரித்தல் அவசியமாகும்.
- பயன்பாட்டில் இல்லாத மின் உபகரணங்கள், குழந்தைகள் அணுகக்கூடிய நிலையில் இருக்குமாயின் அவற்றை பாதுகாப்பாக மூடி வைத்திருத்தல் வேண்டும்.
- குழந்தைகளை அழைத்துச் செல்வதற்காக பள்ளியால் செய்யப்பட்ட எந்த ஏற்பாடும் பாதுகாப்பாகவும், வசதியானதாகவும் இருத்தல் வேண்டும்.
- சாத்தியமான ஆபத்து அல்லது துப்புறவு செய்ய பயன்படும் திரவங்கள், நச்சுப் பொருட்கள், சோப்புகள் மற்றும் சலவை சோப்பு போன்றவை அதன் மேற்புற விவரச் சீட்டுடன் அதற்கான கொள்கலனில் வைக்கப்பட்டிருக்க வேண்டும். சமையலறை மற்றும் குழந்தைகள் விளையாடும் இடங்களைத் தவிர்த்து பாதுகாப்பான இடத்தில் இவற்றை சேமித்து வைக்க வேண்டும்.
- பள்ளியின் உட்புற மற்றும் வெளிப்புற வளாகங்களை தினமும் தூய்மைப்படுத்த வேண்டும். அவ்வாறு சுத்தம் செய்கையில் கூர்முனைகள் (ஊசி, பின்கள், கிளைகள்), விஷ கொடி மற்றும் காளான், தேனீ அல்லது குளவிக் கூடு மற்றும் ஊஞ்சல்களின் கீழ் உள்ள மணற்பகுதி ஆகியவற்றை சோதனையிடல் அவசியமாகும்.

### அடையாள அட்டை

- ஒவ்வொரு குழந்தைக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையை அனைத்து முன் பள்ளிகளும் வழங்க வேண்டும். முன் பள்ளிக்கு குழந்தையை அழைத்து வருகையில் மற்றும் கூட்டிச் செல்கையில் பள்ளி நிர்வாகத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை, குழந்தையின் காப்பாளர் வைத்திருத்தல் வேண்டும். பள்ளியில் நுழையும் ஒவ்வொரு முறையும் அடையாள அட்டையை பாதுகாவலர் சரிபார்க்க வேண்டும்.

### அழைத்துச் செல்லுதல் மற்றும் பள்ளியில் விடும் வசதி

- பள்ளிக்கு அழைத்துச் செல்லவும் பள்ளி முடிந்து வீட்டிற்கு விடும் செயற்பாட்டிற்கு ஏற்ற ஓர் குறிப்பிட்ட இடத்தை பெற்றோர் தேர்ந்தெடுத்தல் வேண்டும். அவ்விடத்தில் ஆசிரியர் தனது வகுப்பு மாணாக்களுடன் ஒருபுறமும் பெற்றோர் ஒருபுறமும் இருந்து, குழந்தைகளை பத்திரமாக பெற்றோரிடம் ஆசிரியர் ஒப்படைக்க வேண்டும்.

அவ்விடமானது ஒரு கதவு அல்லது கயிறு கொண்டு பாதுகாக்கப்பட வேண்டும். ஏனெனில், வேற்று மனிதர் அல்லது பெற்றோர் அவ்விடம் செல்வதைத் தவிர்ப்பதற்கான ஏற்பாடாகும்.

### கண்காணிப்பு கேமரா

- ஒவ்வொரு வகுப்பறையிலும் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

இதன் மூலம் பள்ளி வளாகத்தை முழுமையாக கண்காணிக்க இயலும்.

- உள்ளே மற்றும் வெளி செல்லும் வழி, வரவேற்பு அறை, காத்திருக்கும் அறை, விளையாட்டு மைதானம், கழிப்பிடத்தின் வெளிப்புறம், நடைபாதை ஆகிய அனைத்து இடங்களிலும் கண்காணிப்பு கேமரா பொருத்தபட்டிருக்க வேண்டும்.
- கண்காணிப்பு கேமராக்களில் பதிவாகும் செயற்பாடுகளை கண்காணிக்க குறைந்த பட்சம் ஒரு பாதுகாவலரை நியமிக்க வேண்டும்.

### குழந்தைகளிடம் முறைகேடு மற்றும் உரிமைகள்

உடல் ரீதியாக மற்றும் உள ரீதியாக முறைகேடு கூடாது. உடல் ரீதியான தண்டனை அளிக்கக்கூடாது. குழந்தைகள் புறக்கணிக்கப்படக்கூடாது.

குழந்தைகளிடம் முறைகேடு அல்லது புறக்கணிப்புக்கான ஏதேனும் அறிகுறிகளைக் கண்டால் அனைத்து ஆசிரியர்களும் சரியான முறையில் அதனை புரிந்துக் கொள்ள, அடையாளம் காணவும், பதிலளிக்கவும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

## 6.8 அவசர நிலைகளைக் கையாளுதல்

### அவசரகால நெறிமுறை

- அனைத்து மையங்களிலும் அவசர காலத்தில் தெளிவான எழுத்துப்பூர்வ நடைமுறைகள் இருக்க வேண்டும். அனைத்து ஊழியர்களும் பின்வரும் நடைமுறையை பின்பற்ற வேண்டும்.
- ஒரு ஊழியர் காயமடைந்த குழந்தையுடன் இருக்க வேண்டும்.
- ஒரு ஊழியர் ஆம்புலன்ஸ் மற்றும் குழந்தையின் பெற்றோரை தொலைபேசியில் அழைக்க வேண்டும்.
- இயலும் எனில் குழந்தையை நேரடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லலாம்.
- 2 அல்லது 3 ஊழியர்கள் மற்ற குழந்தைகளை கவனித்துக் கொள்ள வேண்டும்.
- விபத்துகள் அல்லது நிகழ்வுகள் பதிவேட்டில் அனைத்து விபத்துகள் அல்லது நிகழ்வுகளும் பதியப்பட்டிருக்க வேண்டும். நேரம், விபத்து/நிகழ்வின் தன்மை மற்றும் அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை ஆகியவை குறிப்பிட வேண்டும்.
- எந்தவொரு மருத்துவ சிகிச்சையும் தேவையில்லாத விபத்துக்கள் நிகழ்ந்த நாள் அன்றே பெற்றோர் அல்லது பாதுகாவலர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

### பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல்

டெங்கு, சிக்குன் குனியா மற்றும் மலேரியா போன்ற நோய்கள் ஏற்படாமல் தற்காத்துக் கொள்ள குறிப்பிட்ட கால இடைவெளியில் பூச்சிகள் வளர்வதை கட்டுப்படுத்த தகுந்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

### பேரிடர் மேலாண்மை

- ஒவ்வொரு மையத்தின் வெளியேறும் இடத்தில் அக்கட்டிடத்தின் வரைப்பட திட்டம், வெளியேறும் வழி ஆகியன வைக்கப்பட்டிருக்க வேண்டும். தீ மற்றும் பூகம்பம் ஏற்படுகையில் அவற்றை கையாளும் விதம் குறித்து மாணவருக்கு பயிற்சியளிக்க வேண்டும்.
- சாதாரண மற்றும் அவசர காலங்களில் வெளியே செல்வதற்கான வழி தெளிவாக "வெளியே" என குறிப்பிட்டிருக்க வேண்டும். அவ்வழியானது எவ்விதமான தடைகளின்றி இருக்க வேண்டும்.

### தீ பாதுகாப்பு

பொருத்தமான இடங்களில் தீ அணைப்பான்கள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.



XII Std - Home Science TM_Unit 6.indd 196 07-12-2021 12.59.24 PM

### முதலுதவி பெட்டி கிடைக்கக்கூடிய தன்மை

முதலுதவி பெட்டி தவறாமல் புதுப்பிக்கப்பட்டு ஒரு நியமிக்கப்பட்ட இடத்தில் வைக்கப்பட வேண்டும். அவை ஊழியர்களுக்கு எளிதில் அணுகக் கூடியதாக ஆனால் குழந்தைகளுக்கு எட்டாதவாறு இருக்க வேண்டும்.

- கட்டுத் துணி
- ஒட்டும் பிளாஸ்டர்
- கிருமியழிக்கப்பட்ட பஞ்சு
- கட்டுப் பட்டை
- வெப்பநிலைமானி
- கத்திரி
- இடுக்கி
- ஆண்டிசெப்டிக் மருந்து

## 6.9 முன் பள்ளி பாடத்திட்டம்

பாடத்திட்டத்தினை உருவாக்கும்போது, ஒவ்வொரு முன் பள்ளி குழந்தையின் தேவையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். பாடத்திட்டமானது பலவித வேறுபட்ட அனுபவங்களை அளிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். ஒருவரோடு ஒருவர் ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்புகள், புலன் சார்ந்த அனுபவங்கள், இயற்கை மற்றும் தன்னைச் சுற்றியுள்ள சுற்றுப்புறச் சூழலை கற்று அறிந்து கொள்ளுதல், அறிவுத்திறனை ஊக்கப்படுத்தக் கூடிய தசைச் செயல்பாடுகள், மொழியினைக் கேட்டு, பயன்படுத்தக்கூடிய வாய்ப்புகள் போன்றவை பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். சுறுசுறுப்பான விளையாட்டு மற்றும் அமைதியான விளையாட்டுகள் இடம்பெற்றிருக்க வேண்டும். தேசிய விழாக்கள், சமுதாய விழாக்கள் மற்றும் கொண்டாடங்கள் கண்டிப்பாக பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

ஒரு சிறந்த முன் பள்ளி பாடத்திட்டத்தினை உருவாக்குவதற்கான கருத்துக்கள்.

- பாடத்திட்டங்கள் எளிமையாக இருத்தல் வேண்டும்.
- ஒரு குறிப்பிட்ட கருத்தினை முழுவதுமாக, அனுபவபூர்வமாக அறிவதற்கு ஏற்ற நேரம்/காலம் அளித்தல். அதன் பின்னர், படிப்படியாக புது அனுபவங்களைச் சேர்த்துக் கொள்ளுதல்.
- ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் புத்துணர்வினை ஊட்டும் செயலுக்கு வாய்ப்பளித்தல்.
- திட்டமிடப்பட்ட பாடத்திட்டமானது, குழந்தைகளின் அறிவுத்திறனுக்கு அதிகமாக இருந்தால் எரிச்சலூட்டக் கூடியதாக அமையும். அறிவுத்திறனுக்கு குறைவாக பாடத்திட்டம் அமையும் பட்சத்தில், அலுப்பூட்டக் கூடியதாக இருக்கும்.
- குழந்தைகளின் ஆயத்தத்தன்மையை கண்டறிந்த பின்பு, அதற்கேற்றவாறு பாடத்திட்டம் அமைக்கப்பட வேண்டும்.
- முன் பள்ளி பாடத்திட்டத்தில் சுதந்திரமான விளையாட்டுமூலம் (உட்புறமற்றும்வெளிப்புற விளையாட்டு) தங்களது மனதிலுள்ள உணர்வுகளை வெளிப்படுத்துதல் ஆக்கப்பூர்வ நேரம், பாடல் மற்றும் கதை நேரம், தசை வளர்ச்சி மற்றும் மொழி வளர்ச்சி போன்றவை சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.
- பாடத்திட்டம் கடினமானதாக இருத்தல் கூடாது. மாற்றங்கள் அல்லது சேர்த்தலை ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
- சுதந்திரமாக இருக்கும் தன்மை மற்றும் ஆக்கப்பூர்வதிறனை ஊக்கப்படுத்தும் விதமாக விளையாட்டு உபகரணங்கள் மற்றும் பொருட்கள், குழந்தைகள் எளிதில் அடையக் கூடிய இடத்தில் இருக்குமாறு அமைத்தல் வேண்டும்.

### பாடத்திட்டத்தின் வகைகள்


முன் பள்ளி குழந்தைகளுக்கு பொருத்தமான கற்றல் திட்டங்களை முன்னெடுப்பதில் கவனமாகவும், ஆக்கப்பூர்வமாகவும் திட்டமிடுதல் வேண்டும்.

முன் பள்ளி குழந்தைகளின் வயது, ஆர்வம், திறன் ஆகியவற்றினைப் பொறுத்து



XII Std - Home Science TM_Unit 6.indd 197 07-12-2021 12.59.25 PM

மாற்றங்களை ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் பாடத்திட்டம் அமைக்கப்பட வேண்டும். கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில், ஒரு தினசரி மாதிரி பாடத்திட்டம் தரப்பட்டுள்ளது. தினசரி பாடத்திட்டத்தில், இசை, நடனம், கண்டுபிடித்து கற்றறிதல், சுற்றுலா, மேலும் பல செயல்கள் தேவைக்கேற்ப சேர்க்கப்பட வேண்டும்.




**அட்டவணை 6.2**

முன்பள்ளியின் தினசரி பாடத்திட்டம்

| நேரம் | செயல்பாடுகள் |
|---|---|
| 8.30 - 8.45 am | ஆசிரியர் வருகைபுரிதல், தயாராகுதல் |
| 8.45 - 9.00 am | மாணவர்கள் வருகைபுரிதல் |
| 9.00 - 9.15 am | காலை வழிபாட்டு பாடல் மற்றும் உடற்பயிற்சி |
| 9.15 - 9.45 am | சுதந்திரமான, ஆக்கப்பூர்வ விளையாட்டு. |
| 9.45 - 10.30 am | குழு வேலை - வரைதல், வர்ணம் பூசுதல் |
| 10.30 - 11.00 am | நொறுக்குத் தீனி - இடைவேளை |
| 11.00 - 11.30 am | விளையாட்டு திடலில் விளையாடுதல் |
| 11.30 - 11.50 am | எழுதும் வேலை |
| 11.50 - 12.10 am | வாசித்தல் /சொல்லுதல் |
| 12.10 - 12.50 am | மதிய உணவு இடைவேளை |
| 12.50 - 1.00 pm | கதை சொல்லுதல் |
| 1.00 - 2.00 pm | தூங்குதல்/அமைதியான செயல்பாடுகள்/செல்லுதல் |

## 6.10 பதிவுகள் மற்றும் பதிவேடுகள்

முன் பள்ளியை திறம்பட நிர்வகிக்க முறையான பதிவுகள் மற்றும் பதிவேடுகளை பராமரிக்க வேண்டிய அவசியம் உள்ளது. அவற்றின் பராமரிப்பை எளிதாக்கும் வகையில் இவை வடிவமைப்பில் எளிமையாக இருக்க வேண்டும். பதிவுகள் மற்றும் பதிவேடுகளை நிரப்புவது மிகவும் சிக்கலானதாக இருக்கக்கூடாது. அது திட்டத்தின் உண்மையான செயல் வடிவில் இருத்தல் வேண்டும். ஒரு முன் பள்ளி தொடர்ந்து வைத்திருக்க வேண்டிய மற்றும் பராமரிக்க வேண்டிய சில அத்தியாவசிய பதிவுகள் மற்றும் பதிவேடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### பதிவுகள்

**அத்தியாவசியமானவை**

- சேர்க்கை பதிவுகள்
- பதிவு படிவங்கள்
- குழந்தையின் தனிப்பட்ட விவரம் குறித்த தாள்
- குழந்தையின் விரிவான பின்னணி தகவல்கள்

**முன்னேற்ற பதிவுகள் (பதிவுப் பணி)**

குறிப்பிட்ட கால அடிப்படையில் குழந்தைகளின் பல்வேறு வளர்ச்சி சார்ந்த பதிவுகள்

- குழந்தைகளின் வேலை
- ஆசிரியர்களின் கண்டறிபதிவு

**ஆசிரியர் குறிப்பேடு**

ஆசிரியர்களின் மாதாந்திர மற்றும் தினசரி திட்ட குறிப்பேடு.

### பதிவேடுகள்

- குழந்தைகள் மற்றும் ஆசிரியர்களின் வருகைப் பதிவேடு
- வரவு செலவு கணக்கு பதிவேடு
- பொருள் இருப்பு பதிவேடு
- ஊழியர்களின் சுய விவரம்
- பெற்றோர் ஆசிரியர் கூட்ட விவரப் பதிவேடு



XII Std - Home Science TM_Unit 6.indd 198 07-12-2021 12.59.26 PM

## பாடசுருக்கம்

- நவீன கால முன்பள்ளி பருவ கல்வித்திட்டம் "எவ்வாறு கற்பது" என்பதில் கவனம் செலுத்துகிறது.
- முன்பள்ளிபருவத்தில்வளர்ச்சிஅதிவேகமாக இருப்பதால், வாழ்க்கையின் வளர்ச்சி நிலைகளில் முக்கியமாகக் கருதப்படுகிறது.
- திறன்களை கற்றுக் கொள்வதற்கு மிகச்சிறந்த பருவம் முன்பள்ளி பருவமாகும்.
- சுத்தம் மற்றும் சுகாதார பழக்க வழக்கங்கள் இப்பருவத்தில் சிறப்பாக கற்பிக்கப் படலாம்.
- முன்பள்ளி பருவ கல்வியின் முக்கிய குறிக்கோளாக விளங்குவது, குழந்தைகளின் உடல், சமூக, மன மற்றும் அறிவு வளர்ச்சியின் ஒருமித்த முன்னேற்றமாகும்.
- பகல்நேர பராமரிப்பு, மாண்டிஸோரி பள்ளி, கிண்டர் கார்டன், நர்சரி பள்ளி, பால்வாடி போன்ற பல பள்ளிகள் முன்பள்ளி பருவ கல்வியினை அளிக்கிறது.
- பகல் நேர பராமரிப்பு என்பது, தன் தேவை களுக்காக பிறரை சார்ந்துள்ள குழந்தைகளுக்கு அளிக்கப்படும் பராமரிப்பு ஆகும்.
- புலன் உணர்வுகளுக்கு பயிற்சி அளிப்பது, மாண்டிஸோரி பள்ளி கல்வித்திட்டத்தில் எழுதுவதற்கும், வாசிப்பதற்கும் அடிப்படையாக விளங்குகிறது.
- விளையாடுதல், பாடுதல் மற்றும் செயல்முறை செயல்கள் போன்ற அணுகுமுறைகள் கிண்டர்கார்டன் பள்ளிக் கல்வியில் செயல்படுத்தப்படுகிறது.
- விளையாடுதல் மற்றும் கலைகளை வெளிப்படுத்தும் செயல்கள் மூலமாக குழந்தைகளிடையே ஆக்கபூர்வ திறன் வளர்க்கப்படுகிறது.
- பால்வாடி என்பது கிராமபுறங்களில், கிராம குழந்தைகளுக்கு கற்றலின் அடிப்படை திறன்களை அவர்களது தாய் மொழியிலேயே இலவசமாக அளிக்கப்படும் ஓரிடமாகும்.
- ஒன்றுக்கொன்று தொடர்புடைய இடமும் மற்றும் கட்டிட அமைப்பும் ஒரு சிறந்த முன்பள்ளிக்கு அடிப்படை தேவையாக விளங்குகிறது.
- கட்டிட வரைபட அமைப்பு பள்ளிகளின் வகைகளுக்கு ஏற்றவாறு மாறுபடுகிறது. கட்டிட வரைபடம், சுகாதாரம், சுத்தம், வெளிச்சம், காற்றோட்டம், விளையாட்டு அறைகள், ஆய்வகங்கள் போன்ற மேலும் காரணிகளின் அடிப்படையில் தீர்மானிக்கிறது.
- முறையான பாடத்திட்டம் முன்பள்ளி குழந்தைகளுக்கு திட்டமிட கவனமும், ஆக்க பூர்வமான திட்டமும் தேவைப்படுகிறது.
- பாடத்திட்டம், நீண்ட மற்றும் குறுகிய கால பாடத்திட்டமாக இருக்கலாம்.
- குழந்தை காப்பகம்/பகல் நேர பராமரிப்பு மையம் என்பது முன்பள்ளி பருவம் மற்றும் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு ஒரு மாற்று இருப்பிடமாகும், பெற்றோர்கள், குழந்தைகளை விட்டு வெளியே இருக்கும் சமயத்தில் இவ்விடத்தில் குழந்தைகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் இடமாகும்.
- பாதுகாப்பு ஏற்பாடுகள், போதுமான அளவு கழிப்பறை வசதி, கை கழுவும் வசதி, வாகனம் நிறுத்துமிடம் அதிக பரப்பளவு கொண்ட சிறந்த வகுப்பறைகள், போன்றவை குழந்தை காப்பகம்/பகல்நேர பராமரிப்பு மையங்கள் ஆரம்பிக்கும்போது முக்கியமாக கவனிக்கபட வேண்டும்.

## A-Z கலைச்சொற்கள்

- கற்றுஅறிதல் (lognitive): அறிதல், கற்றல் மற்றும் புரிந்துகொள்ளும் திறன்
- முன்பள்ளி (preschool): சிறு குழந்தைகள் கல்வி கற்குமிடம்
- முன்பள்ளி பருவத்தினர் (Preschooler): 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள்
- அழகுணர்வு (Aesthetic sense): அழகினை ஆராதித்தல்
- உடல் கட்டமைப்பு (Physique): உடலின் வெளிவடிவமைப்பு
- தொடர்பு (Interact): தொடர்பு மற்றும் செயல்படு
- ஒருவருக்குமட்டும் (one-on-one) தனியாள்
- பின்விளைவு (Drawback): தீமைகள்/ தடைகள்

## மதிப்பீடு

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக 1 மதிப்பெண்

1. சரியான கூற்றினை எடுத்து எழுதவும்
அ) நல்ல பழக்கவழக்கங்கள் மற்றும் நன்னெறிப் பண்புகள் முன்பள்ளி பருவ கல்வியின் மூலம் பெறப்படுகிறது.
ஆ) சுத்தம் மற்றும் சுகாதார பழக்கங்கள் முன்பள்ளியில் கற்று கொடுக்க தேவையில்லை
இ) குழந்தைகளின் மேம்பாட்டை அதிகப்படுத்துவதை முன்பள்ளி கல்வியில் முக்கியத்துவம் தரப்படவில்லை
ஈ) முன்பள்ளி கல்வி குழந்தைகளின் வளர்ச்சியில் முக்கிய பங்கினை அளிப்பதில்லை.

2. தரப்பட்டுள்ள கூற்றுக்கு ஆதாரமாக உள்ள விடையை தேர்ந்தெடுத்து எழுது முன்பள்ளி கல்வி இதற்கு உதவுகிறது
i. முன்பள்ளி பருவத்தினருக்கு வலிமை அளிக்கிறது
ii. வாழ்க்கை முழுவதும் கற்பதற்கு சிறந்த அடித்தளத்தை அளிக்கிறது
iii. பொருளாதாரத்தில் பின்தங்கிய குழந்தைகளுக்கு கல்வி அளிக்கிறது
iv. ஆரோக்கியமான மற்றும் வளர்ச்சியை உருவாக்கும் சூழலை ஏற்படுத்துகிறது
அ) (i), (ii) - சரி
ஆ) (iii), (iv) - சரி
இ) (i), (iii) - சரி
ஈ) i, ii, iii, iv – சரி

3. எனக்கு சிறந்த கல்வி கற்பதற்கான உரிமை உள்ளது. அனைத்து குழந்தைகளையும் பள்ளிக்கு அனுப்ப ஊக்குவிப்பதில் ஒவ்வொருவருக்கும் பொறுப்பு உள்ளது என்பதை உறுதிபடுத்தும் விதியினை எழுதுக
அ) 28, 29, 23 ஆ) 27, 28, 29
இ) 26, 27, 28 ஈ) 25, 26, 27

4. முன்பள்ளி கல்வியின் நோக்கமானது
அ) உடல் மற்றும் சமூக வளர்ச்சி
ஆ) சமூகம் மற்றும் மனவளர்ச்சி
இ) மனம், மற்றும் அறிவுதிறன் வளர்ச்சி
ஈ) உடல், சமூகம், மனம் மற்றும் அறிவுதிறன் வளர்ச்சி

5. பின்வருவனவற்றுள் தவறான கூற்றை கண்டறிக. முன்பள்ளி பருவ குழந்தையின் ஆரோக்கியமான பழக்க வழக்கங்களாவன
அ) ஆடைகளை அணிதல்
ஆ) தசை ஒருங்கிணைப்பு
இ) தானாக உண்ணுதல்
ஈ) சுகாதாரத்தை கடைபிடித்தல்

6. பகல்நேர பராமரிப்பு என்பது ____________ குழந்தைகளுக்கு அளிக்கப்படும்
அ) அம்மா இல்லாத போது
ஆ) அப்பா இல்லாத போது
இ) பெற்றோர் இல்லாத போது
ஈ) மேற்கூறிய அனைத்தும்

7. முன்பள்ளி பருவத்தில் ஒருவருக்கு-ஒருவர் கவனிப்பு அளிக்கப்படும் இடம்
அ) வீட்டு கவனிப்பு
ஆ) பகல்நேர பராமரிப்பு மையம்.
இ) குழந்தைகள் காப்பகம்
ஈ) மேற்கூறிய அனைத்தும்

8. மாண்டசோரி முன்பள்ளி கல்வி திட்டத்தில் தொடர்பினை உருவாக்கக்கூடிய இரண்டு காரணிகள்
அ) உடல் அமைப்பு மற்றும் உடல் செயல்பாடு
ஆ) வாசித்தல் மற்றும் கற்றல்
இ) எழுதுதல் மற்றும் வரைதல்
ஈ) புலன் உணர்வு மற்றும் அறிவுத்திறன்

9. பால்வாடி என்னும் முன்பள்ளி அமைந்துள்ள இடம்
அ) கிராமபுறங்கள்
ஆ) நகரங்கள்
இ) நகர்புறங்கள்
ஈ) மேற்கூறிய அனைத்தும்



XII Std - Home Science TM_Unit 6.indd 200 07-12-2021 12.59.27 PM

10. பொருத்துக

| | A | B |
|---|---|---|
| (i) | கிண்டர்கார்டன் | மாக்மில்லன் |
| (ii) | நர்சரிபள்ளி | மரியா மாண்டசோரி |
| (iii) | பால்வாடி | பிரடெரிக் ஃபிராபெல் |
| (iv) | புலன் உணர்வுகள் மற்றும் அறிவுத்திறன் | கிரேவல் |

அ) i, ii, iii & iv


ஆ) ii, iii, iv, i

இ) ii, iv, i, iii

ஈ) iii, ii, i, iv

## II. சிறுவினாக்கள் 2 மதிப்பெண்கள்

1. ஒருவரின் வாழ்க்கையில் முன்பள்ளி பருவம் எவ்விதம் முக்கியமானதாகிறது?
2. குறிக்கோள் என்பது ஒரு நிறுவனத்திற்கு முக்கியமானது. சரி எனில், முன்பள்ளி கல்வியின் இரண்டு குறிக்கோள்களை எழுதுக.
3. முன்பள்ளி குழந்தைகளின் நுண் தசை இயக்க ஒருங்கிணைப்பிற்கு உதவும் நான்கு செயல்பாடுகளை பட்டியலிடுக.
4. அதிகமான பெற்றோர்கள் தங்களது குழந்தைகளுக்கு, அவர்கள் இல்லாதபோது மையம் சார்ந்த பராமரிப்பினை தேர்ந்தெடுக்கிறார்கள். நியாயப்படுத்துக.
5. குழந்தை பராமரிப்பு அளிப்பவர்கள் என்ற வார்த்தையிலிருந்து நீ அறிந்து கொள்வது யாது? பெற்றோர்கள் இவ்வகைப் பராமரிப்பினை தேர்ந்தெடுப்பதற்கான காரணங்களை எழுதுக.
6. முன்பள்ளியின் வகைகளை பட்டியலிடுக.
7. முன்பள்ளி அமைந்துள்ள இடத்தை சுற்றியுள்ள சூழல் குழந்தைகளின் ஆரோக்கியத்தையும், மனோபாவத்தையும் தீர்மானிக்கிறது. விவரி.
8. முன்பள்ளி கட்டிட அமைப்பின் தேவைகள் யாது.
9. முன்பள்ளிக்கு தேவைப்படும் விளையாட்டு அறை எண்ணிக்கையைப் பொறுத்து பரப்பளவு எவ்வளவு?
10. வெற்றிட கட்டங்களை சரியான வார்த்தைகளால் நிரப்புக.




## III. குறுவினாக்கள் 3 மதிப்பெண்கள்

1. கிராமப்புற முன்பள்ளி பருவத்தினருக்கு கல்வி அளிப்பதில் பால்வாடி முக்கிய பங்கு அளிக்கிறது. இக்கூற்றினை நியாயப்படுத்துக.
2. நர்சரி பள்ளியில் வலியுறுத்தப்படும் கருத்துககளை பட்டியலிடுக.
3. முன்பள்ளி கட்டடத்தில் மண்ணின் வகை முக்கியத்துவம் வகிக்கிறது ஏன்?
4. முன்பள்ளியில் சேமிக்கும் இடம் தேவைப்படுகிறது. இக்கூற்றை விவரி.
5. முன்பள்ளியில் பாடத்திட்டம் முக்கிய அங்கமாக விளங்குகிறது. பாடத்திட்டத்தினை வகைப்படுத்துக.
6. குழந்தை காப்பக பணியாளர்களுக்கு பலவகை திறன்கள் அவசியம்? அவை யாவை? இத்திறன்கள் முன்பள்ளி பருவத்தினரை வளர்ப்பதற்கு எவ்வாறு உதவுகிறது.
7. முன்பள்ளி வகுப்பறையில் சுவர்கள் எவ்வாறு இருக்க வேண்டும்?
8. முன்பள்ளி வகுப்பறையில் உள்ள கதவுகள் மற்றும் சன்னல்கள் குறிப்பிட்ட தரத்தோடு ஏன் இருக்க வேண்டும்?

9. அமைப்பு மற்றும் முன்முக தோற்றம் முன்பள்ளி கட்டடத்தில் முக்கியம் விவரி.

10. முன் பள்ளியில் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகளை விவரிக்கவும்.

## IV. விரிவான விடையளி

**5 மதிப்பெண்கள்**

1. குறிக்கோள்கள் நமது நோக்கங்களை அடைய உதவுகிறது. முன் பள்ளி கல்வியின் குறிக்கோள்கள், முன்பள்ளி பருவத்தினரின் வேறுபட்ட தேவைகளை அடைய எவ்வாறு உதவுகிறது என்பதை விவரி.
2. பெற்றோர்களுக்கு மாற்றாக பகல்நேர மையம் செயல்படுகிறது நியாயப்படுத்துக?
3. முன்பள்ளியின் வகைகளைப் பட்டியலிட்டு ஏதேனும் இரண்டினை விளக்குக.
4. சிறந்த முன்பள்ளி கட்டிடத்தை பல்வேறு காரணிகள் உறுதிபடுத்துகின்றன. அவைகளை பட்டியலிட்டு விளக்குக.
5. முன்பள்ளியை தேர்ந்தெடுப்பதில் பள்ளியின் சுற்று வட்டம் தீர்மானிக்கிறது. இது உண்மையா? விவரி.
6. முறையான முன்கல்வி பாடத்திட்டம், முன்பள்ளி பருவத்தினருக்கு, கல்வி அளிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. முன்பள்ளி குழந்தையின் ஒரு நாளை மாதிரி பாடத்திட்டத்தை திட்டமிடுக.
7. நிர்மலா என்பவர், தன்னுடைய குடும்ப வருமானத்தை அதிகரிப்பதற்காக குழந்தை காப்பகத்தை ஆரம்பிக்க விரும்புகிறார். குழந்தை காப்பகம் அமைப்பதில் உள்ள படிகளை வழிகாட்டுதலின் மூலம் அவருக்கு விவரிக்க.
8. முன் பள்ளியில் பராமரிக்கப்பட வேண்டிய பதிவு மற்றும் பதிவேடுகளை விவரிக்கவும்.

## மேற்கோள் நூல்கள்


1. Mina Swaminathan & Prema Daniel. Play Activities for Child Development A guide to preschool teachers.. National Book Trust, India, First Reprint Green Park, New Delhi-110 016. (2005).
2. Padma Yadav, Exemplar Guidelines for Implementation of Early Childhood Care and Education Curriculum, 2015, NCERT, New Delhi.
3. Romilasoni, Theme Based Early Childhood Care and Education Programme - A resource book, NCERT-2015.
4. Elizabeth B. Hurlock, Developmental Psychology - A Life-span approach, Fifth Edition, TATA Mcgrow Hill Publishing Company Ltd., New Delhi, 1980.
5. Srivastava, Sushila, and Sudha Rani K. *Textbook of Human Development - A Lifespan Developmental Approach*. S. Chand & Company Pvt. Ltd., New Delhi, 2014.
6. www.child.encyclopedia.com/
7. https://en.wikipedia.org/wiki/early childhood education
8. www.education.vic.gov.au/childhood
9. pt.slideshare.net
10. https://www.workspace.co.uk/
11 https://smallbusiness.chron.com/




XII Std - Home Science TM_Unit 6.indd 202 07-12-2021 12.59.27 PM